ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

பூமியில் பொதுவாக எல்லாவிடங்களிலும் எல்லா ரஸங்களும் வியாபித்து இருந்தபோதிலும் அந்தந்தபீஜங்(விதை)களினின்றுண்டாகும்செடி, கொடி, ஓஷதி விருக்ஷாதிகளில் அந்தந்தரஸங்கள்தான் பிரவேசிக்கின்றன. உதாரணமாக பூமியிலெங்கும் வியாபித்திருக்கும் தித்திப்பு ரஸம் கரும்பில் தான் பிரவேசிக்கின்றது. உறப்புரஸம் மிளகாயில்தான் சேறுகின்றது. புளிப்புரஸம் எலுமிச்சை. புளியின்காய் முதலியவற்றில்தான் வருகின்றது இதுபோலவே மற்ற ரஸங்களும் அந்தந்த வஸ்துக்களில் சேறுகின்றன. இந்த உதாரணங்கள் போல் மனிதர்கள் அந்தக்கரணத்தில் படிந்துகிடக்கும் பூர்வவாசனைக்குத் தக்கபடி அந்தந்த குணங்கள் சேருகின்றன- அதனுற்றான் பிறவி முதற்கொண்டே சிலர் சம, தம, தயா அஹிம்ஸாதிகுணங்களில் பிரியப்படுகிறார்கள். சிலர் ராக. துவேஷ, மத, மாத்ஸர்யாதிகளை அடைகின்றனர். மிருதுஸ்வபாவமுள்ளவர்களாகச் சிலர் காணப்படுகின்றார்கள். குரூரஸ்வபாவமுள்ளவர்களாகச் சிலர் இருக்கிறார்கள் அந்தவாஸனுவசத்தாற்றான் சிவபெருமானிடம் சிலர்பக்திசெலுத்துகின்றனர். சிலர் விஷ்ணுமூர்த்தியிலீடுபடுகிறார்கள. மற்றும் சிலர் மற்ற தேவதைகளை உபாஸிக்கின்றனர். புறமதங்களைப் பலர் ஸேவிக்கின்றனர்; சிலர் எவ்விஷயத்திலும் ஒழுங்காகவே நடந்து வருகிறார்கள். சிலர் கோணல்வழியிலேயே செல்லுகின்றனர். ஸாத்விகாதி குணவசத்தால் அமைந்த வாஸனைக்குத் தக்கவாருகவே ஸாத்விகாதி ஆஹாரங்களில் அந்தந்த குணமுடையவர் பிரியப்படுகின்றனர். இவ்வாறு ருசிபேதத்திற்கு தக்கபடி ஆசாரபேதமும் அதற்குத் தக்கபடி பரமேசுவர ப்ரஸாதமும் அதற்கனுகுணமாக பிரயோஜனப்ராப்தியும் வருகின்றது. முடிவில் ஒரே விதமாய் ஆகப்போவதாக சுருதிவிித்தாந்தமிருந்தாலும், அந்த நிலை கிடைக்கும்வரையில் இடையில் அதிகதுக்கக்கலப்பில்லாமல்சுகமாகவேயிருகவேண்டுமென்ற ஆசையிருந்தால் சுபவாஸனையுள்ளவர்களாகவே இருக்கவேண்டும். பிறப்பு முதற்கொண்டே சுபவாஸனை இல்லாமல் துர்வாஸனை மேலிட்டிருந்தால் அதை விலக்க முயற்சிக்கவேண்டும். அதற்கு ஸத்ஸங்கமும் ஸாத்விக, ஆஹாரமும், ஸன்மதப்பற்றும், ஸதாசாரியஸேவையுமின்றியமையாத ஸாதனங்களாகும். இவைகளைத்தான் நமதுசுருதிஸ்மிருதி புராணுதிகள் பல வழிகளாலும் போதிக்கின்றன. இவையெல்லாம் சரியல்லவென்று பிரம்மத்வேஷத்தால் சிலர் கூசாமல் பேசுகிறார்கள். ஆயினும் எப்பொழுதும் ஹிதத்தையே உபதேசிக்கும் மாதாபிதாக்கள் சொல்படி கேளாமல் கண்டகாலிகள் கூறுவதையே காதுகுளிரக்கேட்டு பெற்றோரிடம் பிழைசொல்லித்திரியும் குழந்தைகளிடம் துவேஷ புத்தி வைக்காமல் மீண்டும் ஹிதத்தையே போதிப்பது போல் ஸாத்விகர்களும் தம்மீது பழிசுமத்திப் பாமரர் பேசினுலும் அதை பொருட்டாக நினைக்காமல் புண்ணியவழியையே போதிப்பார்கள். யாவரும் அதன்படி நடந்து க்ஷேமத்தை அடைவார்களாக. சுபம்!

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

ப்ரஜாபதி-ஸூ கார்த்திகைமீ ௧௧வ

## பெரியோர் சொற்படி நடப்பது நலம்.

லௌகிக காரியத்திலாகிலும், வைதிக காரியத்திலாகிலும், தன் புத்திபோனவழியாய் நடப்பதைவிடப் பெரியோர் சொற்படி நடப்பதே நலம். அற்பாயுஸ்ஸூம், அற்ப புத்தியுமுள்ளவர்களுக்கு லோக அனுபவமும், சாஸ்திர ஆராய்ச்சியும், மிகக் குறைவாகத்தான் இருக்குமென்பது ஸர்வானுபவஸித்தமான விஷயம்' பல்லாயிரமாண்டுகளாக ஜீவிக்கும்சக்திவாய்ந்த பல பிறப்புகளிலும் பல பெரியார் முன்னிலையில் பல விதமாக ஆராய்ச்சி செய்தும், கண்டுபிடிக்கக்கூடாத பல ஸூக்ஷ்ம விஷயங்கள் சாஸ்திரங்களில் விரிந்து கிடக்கின்றன. அவை அனைத்தையும் குறுகிய ;தன் சிறு புத்தியால் இல்லையென்றே! வேறுவிதமாக அமைக்கப்பட்டிருக்குமென்றே, ஸ்வல்ப்பகால அனுபவத்தைக்கொண்டு தீர்மானித்துவிடுவது யுக்திக்குஒத்ததேயன்று. ஜகத்தையே அடியோடு புரட்டிவிடச் சக்திவாய்ந்த விசுவாமித்திரர், அகஸ்தியர், முதலிய முனிவர்களும். செய்யாமொழியைப் பொய்யென்றுரைக்கப் பயந்து நடுங்குகையில் அதற்கு நேர்விரோதமாக தற்காலத்திய சிலர் சிறுபிள்ளைத்தனமாகப் பேசிவிடத்துணிவது அசட்டுத் துணிச்சலேயாகும் என்பதிற்றடையுண்டோ? ஆகவே வர்ணாசிரமதர்மத்தை விட்டுவிடும்படி போதித்து ஆர்யச்சிறுவர் புத்தியையும் கலக்கத் தலையிடுவது அகாதகாரியமே: இவர்சொற்படி நடந்துவிடலாமென்று நம்பிக்கைகொள்வதற்குக் கைகண்டபலமாக எந்தக்காரியத்தை ஸாதித்துக் காட்டியிருக்கிறார்கள். அகஸ்திய மஹாமுனி சமுத்திரத்தைப் பானம்செய்தாரே; விந்தியமலையை பூமியிலழுத்தினாரே விசுவாமித்திரர் வேறுலகை சிருஷ்டித்தாரே! இதுபோல் ஏதாவதோர் அமானுஷ காரியத்தை தற்காலத்தியவர்கள் செய்தார்களா? அகஸ்தியர் முதலாயினோர் அப்படிச் செய்தார்கள் என்பது

கற்பித்தகதைதானே என்றால், இதை இல்லையென்று கூறுவர் சொல் உண்மைக்கதையென்று துணிவதெப்படி? பிச்சைக்குப் புகுந்து விரட்டப்பட்டு வழிபுரியாமல் விழித்துத் திரியும் வீண் வம்பர்கள் வர்ணாசிரம தர்மம் வேண்டாமென்றால் ஸநாதன தர்மிகள் அதைக் கேழ்ப்பது எப்படி? ஜன்மாந்தரீய பாப கர்மத்தாலமைந்த துஷ்டவாஸனையால் கோணல்வழியில் நடப்பவர்களைசுகத்தை விரும்பியவர்எவர்தான்பின்பற்றுவார். ஒழுங்கான வழியில்நடப்பவர்கள்தான்வழிகாட்டிகள்ஆவார்களேயன்றி மற்றவர்அப்படியாகமாட்டார். ஒழுங்கானவழி சாஸ்திரீயவழியேதவிர மற்றதல்லவென்பது பெரியோர் பழக்கத்தால் வரவேண்டியது ஆகும். இக் கருத்தைத்தான் மஹாபாரதத்தில் महाजनो येन गतः स पन्थाः “பெரியோர் எவ்வழியிற் சென்றாரோ! அதே நல்லவழி என்று யக்ஷப்ரச்னத்தில் தர்மபுத்திரர் தீர்மானங்கூறியிருப்பதாக வர்ணிக்கப்படுகிறது. ஆகையால்சிரேயஸ்ஸை விரும்பியயாவரும் கண்டவர்பேச்சைக்கேட்டுக் கெட்டுப்போகாமல் பெரியோர் சொற்படி நடப்பதே நலம். சுபம்!

பத்திராதிபர்.

---

## தஞ்தசஜில்லா ப்ராம்மணர் ஸநாதனதர்ம ஸம்ரக்ஷண ஸபை தஞ்சாவூர்.

### ஷை ஸபையின் 2வது அப்தபூர்த்தி.

சென்ற ஞாயிற்றுக்கிழமை அதாவது நளதுப்ரஜோத்பத்தி வருஷத்திய துலாமீ 16வுக்குச்சரியான 1-11-1931இல் தஞ்சாவூர் கோட்டை ஸகாநாயகர்வீதி 2312 நெ. ராதாகிருஷ்ண மந்திரத்தில் ஸபையின் 2வது அப்தபூர்த்தி வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது.

கூடலூர் அட்வோகேட் பிர்ம்மஸ்ரீ T. E. சடகோபாச்சாரியார் அவர்கள் அக்ராஸநம்வஹித்தார்கள்.

காலை 8மணிக்கு ஷை ஸபையின் அத்யக்ஷகரான அட்வோகேட் பிர்மஸ்ரீ T. கோதண்டராமய்யங்கார் அவர்களும் அக்ரா

ஸபாதிபதியவர்களும் முன்னுரையாக சில முக்கிய அம்சங்களைப் பற்றிப் பேசினபிறகு சர்க்கார் போதனுமுறை இலாக்காவிலிருந்து ரிடையராயிருக்கிற தஞ்சைவாசியான மகா-ள-ள-ஸ்ரீ P. S. சுந்தரமய்யர் B. A., L. T. அவர்கள் வேதங்கள், உப வேதங்கள், வேதாங்கங்கள். முதலியவைகளைப்பற்றியும், ப்ராம்மணன், சுரோத்ரியன் முதலான ப்ராம்மணனின் பலபடிகளைப்பற்றியும், நமது வைதிகமதத்தில் ஸங்கீதசாஸ்திரமும், ஸங்கீதமும் எப்படி உபயோகமென்பதைப்பற்றியும், வெகு அழகாய் ப்ரமாணவாக்கியங்களுடன் உபன்யஸித்தார்கள்.

சுமார் 10. 30. மணிக்கு காலையில் ஸபைகலைந்தது.

ப்ர்ம்மஸ்ரீ U. P. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள்குழந்தைக் கேற்பட்ட வியாதியினுல் எதிர்பார்த்தபடி வரவில்லை.

மாலையில் 3. மணிக்கு மறுபடியும் ஸபைகூடியது.

கல்கத்தாவிலிருந்து மஹாமஹோபாத்யாய பிர்ம்மஸ்ரீ அநந்த கிருஷ்ணசாஸ்திரிகள் அவர்களும், திருக்கருகாவூர் மகா-ள-ள-ஸ்ரீ T. L. சுப்பையர் அவர்களும், கும்பகோணமிருந்து அட்வோகேட் மகா-ள-ள-ஸ்ரீ M. K. வைத்யநாதய்யர் அவர்களும் அட்வோகேட் மகா-ள-ள-ஸ்ரீ G. V. வெங்கடராமய்யர் அவர்களும், அட்வோகேட்டும் கும்பகோணம் பிராம்மணமஹாஸபை கார்யதர்சியுமான மகா-ள-ள-ஸ்ரீ S. மகாலிங்கய்யர் அவர்களும், திருக்காட்டுப்பள்ளி ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் மகா-ள-ள-ஸ்ரீ குருஸாமி அய்யர் அவர்களும், க்ஷேமம் கிளைஸபை கார்யதர்சி R. சுப்ரமண்ய அய்யர் அவர்களும், தஞ்சை அட்வோகேட் மகா-ள-ள-ஸ்ரீ M. விசுவனதய்யர் அவர்கள் முதலிய பல ஆஸ்திகர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

கார்யக்ரமப்படி ஷை ஸபையின் ஆதரவில்நடந்துவருகிறஆர்ய மத பாடசாலைக் குழைந்தைகள் ஸம்ஸ்கிருத ஸ்தோத்ரங்களும் தமிழ் பாடல்களும் பாடினபிறகு ஷை பாடசாலையின் வேதாத்யயன வகுப்பில் சேர்ந்த இதர ஆங்கில பாடசாலைச் சிறுவர்கள் புருஷசூக்தம் ஜபித்தார்கள்.

ததனந்தரம் ஸபை கார்யதரிசியால் சென்றவருஷத்திய வரலாறும் வரவுசெலவு கணக்குகளும் படிக்கப்பட்டு ஸபையாரால் அங்கீகரிக்கப்பட்டன. கார்யதர்சியால் படிக்கப்பட்டவாலாற்றில் ப்ராம்மண ஸமூகம் இப்போது சீர்குலைந்திருக்கிற நிலைமையைப்

பற்றியும், ஸமூகத்திற்கேற்பட்டிருக்கிற தாரித்திரிய தசையைப் பற்றியும் விரிவாய் எடுத்துரைக்கப்பட்டதோடு மதாசாரவிஷயங்களில் நடுநிலைமை வஹித்துவந்த ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தாரை சீர்திருத்தக்காரர்கள் வீண்பழிக்காளாக்கியும், மேல்நாட்டைப் போல் கீழ்நாட்டையும், செய்துவிட்டால் ஸ்வராஜ்யம் எளிதாய் கிடைத்துவிடும்போல் நம்ஜனங்களைமயக்கியும், ஒருநாள்கூத்துக்கு மீசையைச் சரைத்துக்கொண்டதினுசாய் மத விஷயங்களில் ப்ரவேசிக்கும்படி செய்வதும், அவ்விதமாக ஆலயப்ரவேசம்முதலிய அகார்யங்களில் தீண்டாதாரை தூண்டிவிடுவதும், நிர்ப்பந்தச் சட்டங்களுக்கு ஏற்பாடு செய்வதும் நியாயத் தவறென்றும், ப்ராம்மணச் சிறுவர்களின் படிப்பையும் ஸமூகதாரித்ரியத்தையும் பற்றி ஸமூகம் கவனிக்கவேண்டுமென்றும், சிறுவர்கள் ப்ராம்மண ஸ்வரூபத்தை மாற்றும்படியான அலங்காரங்களையும்வேஷங்களையும் செய்துகொள்ளலாகாதென்றும், ஸ்வயஸமூக மரியாதையைக் காப்பாற்றவேண்டுமென்றும், ப்ராம்மண ஸமூகத்தில் இருக்கிற வரையில் ஸமூகக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்றும், ஒவ்வொருஉபநீதனான ப்ராம்மணனும் ஸந்த்யாவந்தனம் பிரமயக்ஞம்மட்டிலுமாவது சிரத்தையோடு கூடியமட்டில்அநுஷ்டிக்கவேண்டுமென்றும், ப்ராம்மணர்களெல்லோரும் வைதிகர்கள் என்றும், விருத்திவைதிகர்களை லௌகிக வைதிகர்கள் அவமதிக்கலாகாதென்றும், லௌகிகர்கள் அமாவாசை தர்பணாதிகளான கார்யங்களுக்குக்கூட புரோஹிதர்களை அலைக்கழிக்காமல் அதற்கு வேண்டிய மந்த்ரங்களை தாங்களே கற்றுக்கொள்ளவேண்டும் என்றும், லௌகிகர்களுக்கு சிரத்தையுண்டாகும்படியாய் புரோஹிதர்கள் அர்த்தம் தெரிந்துசொல்லக் கற்றுக்கொள்ளவேண்டும் என்றும், வேதாத்யயனமும் ஸம்ஸ்கிருதமும் கலந்துநடக்கிற பாடசாலைகளையேற்படுத்தி காலத்தில்குழந்தைகளுக்கு உபநயனம் செய்வித்து 3 வதுபாரம்வரையிலுமாவது அந்தப் பாடசாலைகளில் படிக்கச்செய்யவேண்டுமென்றும், ஸமூக தாரித்ரிய நிலைமைக்குக் காரணமாயிருக்கிற மேல்நாட்டு நாகரீகஅம்சங்களைத்தள்ளி சுத்த சுவதேசியாயிருக்கவேண்டுமென்றும், வற்புறுத்திவாலாற்றையும் வரவுசெலவு கணக்குகளையும் படித்து முடித்தார்.

அதன்மேல் ஸநாதன தர்மவிஷயத்தில் நம் ஜில்லாவில் கங்கணம் கட்டிக்கொண்டு திரவியத்தாலும்சரீரத்தாலும் பாடுபடுகிற

மகா-ள-ள-ஸ்ரீ T. L. சுப்பைய்யர் அவர்கள் ஷிநோக்கங்களை அனுசரித்து தற்காலத்தில் ப்ராம்மணர்களின் கடமையைப்பற்றி வெகு உருக்கமாய்ப் பேசினார்கள். கார்யதர்சியின் வரலாற்றில் ப்ராம்மணர்களுக்கு இன்னும் ஸமூக உணர்ச்சியேற்படவில்லை என்று கண்டிருந்தபோதிலும் தனக்கு அப்படித் தோன்றவில்லை என்றும், அன்று கூடியிருந்த ஸபையைக்கொண்டே சென்ற அப்தபூர்த்திகாலத்தில்தான்பார்த்ததைவிட இப்போதுஎவ்வளவோ மடங்கு உணர்ச்சி பரவிவிட்டதாகத் தான் அபிப்பிராயப்படுவதாகவும், கூறினார்.

ததுபரி மஹாமஹோபாத்யாய ப்ரம்மஸ்ரீ அநந்தகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் சாரதாசட்ட அநீதியையும், தீண்டாதார்களின் ஆலயப்ரவேச ஸத்யாக்ரஹ விஷயங்களையும் கண்டித்து ஸம்ஸ்கிருத பாஷையிலும் தமிழ்பாஷையிலும் ஆவேசத்துடன் உபன்யஸித்து ஸநாதன தர்மிகளும் ஸத்யாக்ரஹம்செய்துதான் கார்யசித்தி பெறவேண்டுமென்றும், சாரதா சட்டத்தை மீறி காங்கிரஸ் வாலண்டியர்கள்போல் பல ஸநாதனதர்மிகள் கோர்ட்டு நடவடிக்கைகளில் கட்சிசொல்லாமல் ஆயிரக்கணக்காய் ஜயிலுக்கு போகத் தயாராயிருக்க வேண்டுமென்றும், கோயிலுக்குள் ப்ரவேசிப்பதற்கு ஸத்யாக்ரஹிகள் வந்தால் ஸநாதன தர்மிகளும் குருக்கே படுத்துக்கொண்டு பதில் ஸ்த்யாக்ரஹம் செய்யவேண்டுமென்றும், 'தான் வட இந்தியாவில் இவ்விதமாய் ஒரேநாளில் ஸத்யாக்ரஹம்செய்ய ஏற்பாடுசெய்வதற்குத் தயாராயிருப்பதாயும் சொல்லிமுடித்தபிறகு சாரதாசட்ட கண்டன தீர்மானமும் ஷண்முகம்செட்டியார் அவர்களின் ஆலயப்ரவேசமசோதா கண்டன தீர்மானமும், நிறைவேறின.

கடைசியாக அக்ராஸனாதிபதியவர்கள் ஷிவையில் நடத்தி வரப்படும் ஆர்யமத பாடசாலையைப்பற்றியும், இதர வேலைகளைப் பற்றியும், புகழ்ந்துபேசி ப்ராம்மணஸமூகம் இந்தவிஷயங்களில் ஒற்றுழைக்க வேண்டுமென்றும், ஸ்வதர்மத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றும், பேசிமுடித்தபிறகு அவர்களுக்கு ஸபை அத்யக்ஷகர் மகா-ள-ள-ஸ்ரீ T. கோதண்டராமய்யங்கார் அவர்களால் ஹாரம் போட்டு வந்தனோபசாரம் சொல்லப்பட்டது.

பிறகு சந்தனம். பழம். தாம்பூலம்வழங்கி ஸபையின் 2வது அப்தபூர்த்தி உத்ஸவம் ஸம்பூர்ணமாயிற்று.

ஜி. வி. லெக்ஷ்மணசாஸ்த்ரிகள். கார்யதர்சி

# விவேகம்.

பாரதசந்தானர்களே !

அரிது அரிது மானிடலாதரிது என்றபடி இவ்வுலகிலுள்ள 84-லக்ஷம் ஜீவராசிகளில் எழுவகைப்பிறவிகளிலும் மனிதசரீரம் மிகவும் சிரேஷ்டமானது என்பர் பெரியோர். दुर्लभमानुषशरीरं எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான்யாதினுமரிது அரிது காண் என்றார் ஓர் ஞானி. எல்லாஜீவர்களிடமும் பஞ்சேந்திரிய உணர்ச்சிகளில் குறைவுபாடுகளிருக்கின்றன. ஓரறிவின ஈரறிவின மூவறிவன நான்கறிவன ஐயறிவனவாகிய மாவட்டை புழு, ஜலசரங்கள், வண்டு, பறவை, மிருகங்கள் முதலியவைகளைவிட ஓரறிவாகிய விவேகம் என்கிற பகுத்தறிவு மனிதருக்கு பகவானால் அளிக்கப்பட்டிருப்பதாலேயே மனிதஜன்மா மிகவும் உத்கிருஷ்டமானதாகக் கூறப்படுகிறது.

நன்மை, தீமை, புண்ணியபாவ கர்மங்களை அறிந்து செய்கைகளைச் செய்யவும் பிறப்பிறப்பாகிய ஜனனமரண சாகரத்திலிருந்து கரையேற மனிதஜன்மத்திலேயே தான் சற்குருவைநாடி அவரால் மும்மலமொழித்து திவ்யஞானத்தையடைந்து ஆன்மா ஈடேறும் "முக்தி" நிலையை அடையவேண்டியிருக்கிறது.

கண்டது காட்சியாய் உண்பது உடுப்பதும் களிப்பதும், துன்புற்று வருந்தி இறப்பதுமே பிறவியெடுத்த பயன் என்று சொல்வது விவேகமாகாது: அழியும் இன்பங்களையெல்லாம் நாளடைவில் விலக்கி சாக்ஷாத் ஈஸ்வரனருளை முயற்சிக்கவேண்டியது மனிதனின் கடமையில் முக்கியமானது.

आहारनिद्राभयमैथुनेषु सामान्ययेतत्पशुभिर्नराणाम् ।
ज्ञानं हि तेषामधिकोविशेषो ज्ञानेन हीनाः पशुभिस्समानाः ॥

உண்பது, தூங்குவது, பயப்படுதல், பிள்ளைகுட்டி பெறுதல் என்ற நான்கு தொழிலையும் மிருகபக்ஷிகளும் மனிதனும் செய்கின்றன. அவற்றுள் வேற்றுமை எதனாலெனின் ஞானம்" என்பதால் மனிதனுக்கு அறியக்கூடிய விவேகம் அதிகமாய் ஈசுவரனால் அருளப்பட்டுளது. அந்த பகுத்தறிவை உபயோகியாதஞான ஹீனனாகிய

மனிதன் தர்மத்தைவிட்டவன் மிருகத்திற்கே சமானமாவான். என்ற ஹிதோபதேச திவ்யமொழி நோக்கற்பாலது.

தற்கால பத்திரிகைவர்த்த மானங்களால் மனிதகோடிகள் கேவலம் மிருக தர்மத்தையே பெரிதும் அவலம்பிக்கப் போட்டி போடுவதைக்காணலாம். தர்மா தர்மங்களைப் புகட்டும் வேதசாஸ்திர இதிஹாசங்களை பிராமணனும் கூட படிக்காமல் துராசார விருத்திகளில் ஈடுபட்டு கர்ம ப்ரஷ்டராய் வருவது விசனிக்கத் தக்கது. இறைவனருளால் உலகம் சாந்தியடைக.

## சுசீலர்.

மனிதன் ஒன்று நினைக்க கடவுள் வேறு நினைக்கிறார். (Man propases god disposes) மனிதயத்னத்தினல் முடியும் என்று கொள்கையுடைய காரியத்தை கடவுள் மாற்றுகிறார் என்பதற்கு பல திருஷ்டாந்தங்களை அவரவர்கள் ஜீவியத்தில் கண்டிருக்கலாம்

अन्यथा चिन्तितं कार्यं दैवमन्यत्र चिन्तयेत् ।

என்ற வடமொழி பழமொழிக்கிணங்க உலக நிகழ்ச்சிகளையும் காண்கிறோம்.

R. 101 என்ற ஆகாயவிமானம் மனிதயத்திலத்தால் குறித்த காலத்தில் இந்தியா முதலான தேசங்களைச் சுற்றிப் பார்த்து திரும்பிசெல்ல தீர்மானிக்கப்பட்டு கிளம்பிய இரவே பிரான்சில் தீப்பற்றிவிழுந்து நசித்தது. மேல்நாட்டு விஞ்ஞான ரசாயன ஆராய்ச்சிகளில் மிக்க நிபுணர்களான அமெரிக்கா ஆராய்ச்சியாளரும் தங்கள் ஆராய்ச்சிக்கு மேலொரு பெரிய சர்வ சக்தியொன்று இருக்கிறது என்றும் அதுவே கடவுள் என்றும் கூறுகிறார்கள். மனிதன் அமைதியான சாந்தியை மன நிம்மதியை யடையவேண்டின் இந்து சனாதன மதத்தின் அடிப் படையான தத்துவங்களைக் கடைப்பிடித்தே தீரவேண்டும். உண் மையான மனவமைதியும் திடநம்பிக்கையுமிருப்பின் ஈசுவர சாக் தியமாவது திண்ணம். இதற்கொரு சிறு சரிதையை உதாகரிக் கலாம். இது பண்டரீபுரத்து பக்த விஜயத்திலுள்ளது. ஒரு குடும்பத்தில் சுசீலர், ஸ்ரீதரர்என்று இரு சகோதரர்கள் அவிபக்த குடும்பமாய் வாழ்க்கை நடத்திவந்தார்கள். சுசீலருக்கு மானவதி

யென்ற கற்பிற்சிறந்த நளிமணியும் இளையவராகிய ஸ்ரீதருக்கு சுந்தரி என்ற உத்தம இலக்ஷணங்களமைந்த உத்தம ஸ்திரீ ரத்தினமும் அமைந்திருந்து கிருஹகிருத்தியங்களைச் செய்துவந்தனர்

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை யென்றபடி பதிவிரதா லக்ஷணம் குறையாதிருந்தார்கள். மூத்தவருக்கு சந்தானமில்லை. இளையவருக்கு ஒரு ஆண்மகவு பிறந்து வளர்ந்துவந்தது. சுசீலர் என்ற விப்ரோத்தமர் தன்னுடைய பிராம்மண கர்மானுஷ்டானங்களில் வழுவாது ஒழுகிவந்தார். ஓதலினன்றே வேதியர்க்கு ஒழுக்கமல்லவா!

திரிகாலஸ்னான சந்தியாதி பிர்ம்யக்ஞ அக்னிஹோத்திரங்களைச் செய்துவந்ததோடு வேத இதிஹாசங்களைத் தன் ஒழிந்த நேரங்களில் பரோபகாரார்த்தம் தன் வீட்டு திண்ணையிலேயே வாசிப்பார். அதைப்பலர் சிரவணம்செய்து பயன்பெறுவர். ஸ்ரீ பாண்டுரங்கன் ஆலயத்திலும் படனம்செய்து ஹரிநாம பஜனை செய்துவருவது வழக்கம். குடும்ப போஷணையின் கவலை அவருக்கில்லை. ஏனெனில் அவருடைய உத்தம சகோதரனான ஸ்ரீதரன் உள்ள சொற்ப நிலபலங்களைக் கவனித்து வருவதோடு தமையன் சொல் தவறாது ஒழுகிவந்தார். 'ज्येष्ठभ्राता पितृसमः' பெரிய சகோதரனாகிய தமையனர் தகப்பனுக்கு சமானம் தமையன் மனைவி தாய்க்கு சமதியாதலால் ஸ்ரீதரனும் அவன் மனைவி சுந்தரியும் மனமொத்து நிஷ்டரான சுசீலருக்கும் அவர் பத்தினிக்கும் தொண்டுபுரிந்து வந்தனர். வீட்டு சமயல்காரியங்களை பெரும்பாலும் சுந்தரியே கவனித்து வருவாள். தேவதார்ச்சனை அக்னி கார்யம் புராண படனம் ஆண் பெண்களையும் அதிதி அப்யாகதர்களையுமுபசரித்து அன்னமிடுதல் முதலியவைகளை மானவதி கவனித்து வருவாள். சுசீலர் பாகவதம் முதலிலிருந்து வாசித்து வருகையில் அந்தந்தகட்டத்தில் விதிப்படி பிராம்மண சந்தர்பணைகளைச்செய்துவந்தார். அவர் கேட்காமலே ஊரிலுள்ள பிரபுக்களால் சாமக்கிரியைகள் வந்துகுவியும் இவருக்கும்தக்கமரியாதைகள் நடைபெறும்.

மனிதனைக்கெடுத்து இகபரத்தில் கடும் இன்னலும் நரகமும் அனுபவிக்கச்செய்வது லோபகுணமேயாகும். "அழுக்காறெண

ஒரு பாவி திருச்செற்றுத் தீயுழியுய்த்துவிடும்" (குறள்) பொறுமை என்ற கெட்டகுணம் உண்டான தாயின் அவனை செல்வத்தை யிழக்கச்செய்வதோடு கடுநாகில் தள்ளுமன்றோ பொறுமையுற்றான் மனம் அவலெனஎரியும் அவன் எத்திய தொழிலும் தைரியமாய்செய்யத்துணிவான் கடவுளையும்கருதான் தேவகோபத்திற்கு ஆளாகி வருந்துவான். இந்த அனுகூலமான குடும்பத்தைக்கண்டுசகியாதசிலர்இவர்களின் ஒற்றுமைக்குலைக்கக் கருதி வயது முதிர்ந்த ஒரு கிழவியைத்தூண்டி அவள் மூலமாய்ச் சுந்தரியின் மனதைக் கலைத்துவிட்டனர். சுந்தரியின் மனம் மாறியது. நாம் கஷ்டப்பட்டு சமையல்செய்வதேன் தன் மூத்தார் மனைவி அதிகாரம் செய்வதேன். பிள்ளைகுட்டியில்லாத அவர்கள். சொத்தைக்கரைக்க வீண் சிலவுசெய்வதாக முடிவுகட்டினாள் புருஷனை தினம் தன்வழியில் திருப்பமுயன்றாள். அவன் முதலில் திரும்பாவிடினும் கடைசியில்மாறினான். தன் தமயனிடம் சென்று தன் மைத்துனனுக்கு உபநயனம் என்று பொய்கூறி தன் மனைவி யுடன் தன் மாமனார் வீடுசென்றான். செல்லும்போது வீட்டுக்கு சாமக்கிரியை கொடுத்துவந்த கோவிந்த குப்தாவிடம் சென்று தன் தமையனுக்கு பிள்ளை யில்லாமையால் சொத்துகளை நாசம் செய்வதால் இன்றுமுதல் கணக்குதீர்த்து முடிவுகட்டியது. இனி தான் மாமனார்வீடு செல்வதால் வரும்வரையில் தன் உத்திரவின்றி ஒரு மணிசாமான்கூட கடன் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் சட்டப்படி திரும்பி பெறமுடியாது என்று கூறிச் சென்று விட்டான். இதுவரையில் குடும்பகவலையே யற்றிருந்த மானவதி அன்று முதல்நாள் மாலை ருக்மணி திருமணகட்டத்திற்காக பிராம் மண சந்தர்ப்பணைக்கு ஊர் அழைத்துவந்திருக்கிறாள். உக்கிராணம் தூடைத்து விட்டிருப்பதை காலையில் கண்டாள். இதற்குள் சுந்தரியுமில்லாமையால் சகாயத்திற்காக அக்கிஹாரத்திலுள்ள ஸ்திரீகள் சமையலுக்காக ஒத்தாசைசெய்ய ஸ்நானம்செய்து குட தீர்த்தத்துடன் வந்துவிட்டனர். சுசீலரோ சந்திரபாகை நதிக்கு அனுஷ்டானத்திற்கு சென்றிருக்கிறார்.

மானவதி, வந்தஸ்திரீகளை உலர்ந்த ஆடை உடுத்திக்கொண்டு மடப்பள்ளியில் அடுப்புமூட்டக்கூறினாள். உக்கிராண அறையில் நுழைந்தாள். வயற்றில் நெருப்பு கொட்டியதேபோல் பீதி அடைந்தாள், ஆ பண்டரிநாதா! பாண்டுரங்கா விட்டலாயா

இன்று உன்னுடைய திருக்கல்லியாண கட்டத்திற்கு மஹோத்ஸவம் எப்படி கொண்டாடப்போகிறது. வரும் பிராம்மணருக்கு சமையல்செய்ய சாமக்கிரிகள் எப்படிவரும்? நமதுமைத்துனர் மாமனூர் வீடுபோகுமவசரத்தில்சாமக்கிரியைகளை வாங்கிவரும் வழக்கத்தை நேற்று மறந்துவிட்டார்போலும்! சிறு பிராயமல்லவோ! மாமியார்வீடு போவதுயென்றால் சந்தோஷம் இயற்கையல்லவா! நமதுபுருஷரோ இதுவரையில் குடும்பவியவகாரமே தெரியாமல் இருந்தவராயிற்றே என்னசெய்வார்! அவர் வந்ததும் எப்படி இல்லையென்று கூறுவேன். அப்படி கூறுவதைவிட இந்த அறையிலேயே பிராணத்யாகம் செய்துகொள்வதே உத்தமம்!

பாண்டுரங்க! ருக்குமணிகாந்தா! ராதாமனோஹரா! ஆபத்பந்தோ தீனசரண்யா!அனுதாரக்ஷகன் நீயல்லவா!நீஇந்தஆபத்தை தீர்க்காவிடில் உன் பெரும் புகழுக்கு இழுக்கு ஆகுமல்லவா! பக்தபராதீனன்! புருஷோத்தமன்! பரம கருணாமூர்த்தியாகிய நீ இச்சமயம் கைவிடலாகாது. என்று பிரார்த்தித்தாள். கதவைத் தாளிட்டாள். அங்கிருந்த தாம்புக்கயற்றை விட்டத்தில்மாட்டி சுருக்கிட்டுக்கொள்ளத் தீர்மானித்தாள். தேவாராதனை மந்தாசனத்திடம் பகவத் கீதை சுவடியைக் கண்டாள். கல்வி கற்ற வித்தகியாதலால் உடனே கீதையை எடுத்தாள். உடனே பிரித்தாள். 9வது அத்தியாயம் 22வது சுலோகம் தென்பட்டது படித்தாள்.

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

வேறு நினைப்பின்றி என்னையேவழிபடுவார் யாவரோ அவர்களின் (நித்தியயோகிகளின்) நன்மை தீமைகளை சௌக்கியத்தை நானே ஏற்கிறேன். என்ற சுலோகத்தைப் படித்தாள். ஆ கிருஷ்ணா இந்தக் கலியுகத்தில் இதுஒருக்கால் பொய்த்ததோ! இதுவரையில் நீ காக்கவில்லை. ஆதலால் இந்த எழுத்துக்களை படித்து என் போல் பலர் ஏமாறுவார்கள் என்று எழுத்தாணியால் அடித்து விட்டாள். சுருக்கிட்டுக்கொள்ளச் சென்று கயிற்றைக் கழுத்தில் மாட்டிக்கொண்டாள். தெருவில்யாரோ கதவைதட்டின சப்தம் கேட்டு ஸ்திரீகள் கதவைத் திறந்தனர்.

ஒரு செட்டி வண்டிநிறைய சாமக்கிரியையுடன் நிற்கிறான். மானவதியம்மாளைக் கூப்பிடுங்கள். சாமான்களை ஒப்பிவிக்க வேண்டும் என்று அவர்களைத் தாண்டிக்கொண்டுவந்து உக்கிராணக்கதவைத் தட்ட ஆரம்பித்தான். ஸ்திரீகள் மானவதியம்மாளை கூக்குரலிடுவதையும், வைசியசெட்டியின் துணிகரத்தையும் கண்டு மானவதி திக்பிரமைகொண்டு கயிற்றைமறைத்துவிட்டுக் கதவை திறந்தாள். ஸ்ரீதாருக்கு சாமான்கொடுக்கும் செட்டியார் இந்த சாமான்களை அனுப்பினார். சீக்கிரம் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார். மானவதி வண்டிகளிலிருந்த சாமான்களையெல்லாம் உக்கிராணத்தில் நிரப்பிவிட்டாள். அய்யாசெட்டியாரே? கடைக்கு வர மச்சினர்கூட இல்லை. அவர் வரும்வரை தினசரிக்கு சாமக்கிரிகளை நீரே இதுபோல் கொண்டுவந்து கொடுத்துவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டாள். அவனும் சரியென்று சம்மதித்து தினமும் அதி காலையில் சாமக்கிரிகளைக் கொண்டுவந்து கொடுத்துவந்தான். ருக்குமணி கல்லியாண உத்ஸவம் அதி விமரிசையாய் நடந்தது. பிராமண சந்தர்ப்பணையும் நடந்தது அனைவரும் களிப்புடன் சென்றார்கள்.

மாதங்கள் ஆறுஆயின. மாமியார் வீட்டுக்குச் சென்ற ஸ்ரீதார் தன் மனைவி மகனுடன் தன்கிருமம் வர நினைத்தான். இவ்விடம் உண்ண ஒன்றுமில்லாது பிச்சை எடுத்துக்கொண்டு இருக்கும் தமையன்வீட்டில்சாப்பிட அரிசிமுதலியனஒருநாளைக்கு கைக்கு எடுத்துக்கொண்டுவந்தான். வழியில் பல பலநினைக்கிறான். தமயனர் உழைக்கமுடியாதவர். கஷ்டம் அறியாதவர். சம்பாதிக்கத்தெரியாதவர். குடும்பநிர்வாகம் தெரியாதவர். அவர் அந்த ஊரையேவிட்டு காசியாத்திரை போய்விட்டிருப்பர் என்று மனோ ராஜ்ஜியம் செய்து வருகிறவன் ஊரில் நுழைந்தபோது சந்தித்தவர்களை அண்ணனர் சௌக்கியமா? என்றான். அவர்கள் அதிக சந்தோஷத்தோடு இன்றுகூட அவர் வீட்டில் சந்தர்ப்பணை நடந்தது. துவாதசி சமாராதனை என்றார்கள். பொருக்கமுடியாத துக்கமும் கோபமும்கொண்டு வீட்டில் நுழைந்தான். வழக்கப்படி தமயனுக்கும் மன்னியாருக்கும் நமஸ்கரித்தான். அதிக நாள் ஆனதற்க்கு மன்னிக்கவேண்டினன். உடனே கோவிந்த குப்தரின்கடைக்குச் சென்றான். கடுங்கோபங்கொண்டு நான்

சாமான் கொடுக்காதே என்றேனே என் கொடுத்தீர்கள். என்று சண்டையிட ஆரம்பித்தான். அந்த செட்டியார் பேரேடு தினசரி கணக்கைக்காட்டி உன் கையொப்பத்திற்குப் பிறகு ஒரு இம்மி கூட கொடுக்கவில்லை. உன்வார்த்தையால் என் வாடிக்கைவீடு இழந்தேன். அவர் வேரிடம்வாங்குவதாகத் தெரிகிறது. என்று சீரிவிழுந்தான். மனங்கலங்கி வீட்டிற்கு வந்தான். மனைவியிடம் வந்து யார்கொடுப்பது என்று வினவ அதி காலையில் ஒரு செட்டி தாங்கள் உத்திரவுபடிதருவதாகக்கூறி மாமூல் தப்பாமல் கொடுக்கிறானே என்றாள். ஆச்சரியம் அடைந்தான். ஆஹா! மதிகெட்டேனே! எல்லாம் பாண்டுரங்கன் திருவிளையாடலென்று தெளிந்து தன் தலைவனிடம் அடிவணங்கி தன்மூடமதியால் செய்த மஹா அபராதத்தை மன்னிக்கும்படி வேண்டினான். பழையபடி தொண்டுபுரிந்து பகவத் கடாக்ஷம் பெற்றான்.

சுபம்.

# மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

மத்வமதம் பிரச்சன்ன சார்வாக மதமென்பது முதலாவது ரஹஸ்யம். அதுவருமாறு. முன்னொருகாலத்தில் அஸுரர்கள் வேதத்தில் விதிக்கப்பட்ட யஜ்ஞம். தானம், தபஸ்ஸு முதலிய ஸத்கர்மங்களை செய்து அதன் மஹிமையால் ஈசுவரப் பிரஸாதம் பெற்று சௌர்ய தைர்யாதிகளை அடைந்து தனது அஸுர ஸ்வபாவத்தால் ரொம்பவும் கர்வங்கொண்டு மதோன்மத்தர்களாய் ஸாத்விக ஸ்வபாவமுள்ள தேவர்களை ரொம்பவும் ஹிம்ஸித்தார்கள், அதைப் பொறுக்காமல் தேவர்கள் தமது குருவாகிய பிருகஸ்பதிபகவானிடத்தில் தெரிவிக்க அவர் தமது சிஷ்யர்களாகிய தேவர்களுக்கு அஸுரர்களிடத்தினின்றும் ஏற்படும் உபத்திரவத்தை ஏதாவது ஓர் உபாயத்தால் அவச்யம் பரிஹரிக்கவேண்டும். அதற்கென்ன செய்யலாம். அவர்கள் பலிஷ்டர்களாயிருப்பதால் யுத்தம்செய்து ஜயிக்க முடியாது. அவர்களுக்கு இவ்விதபலம் யாகம், தபஸ். முதலிய கர்மங்

களின் சிரத்தையால்வந்தது. ஆதலால் அவர்களுக்கு யஜ்ஞாதி கர்மங்களில் இனி எவ்விதம் சிரத்தை உண்டாகாமலிருக்குமோ இதுவரையில் இருந்த சிரத்தையும் எவ்விதம்நன்றாய்க் குறைந்து விடுமோ அவ்விதம் செய்யவேணுமென்று ஆலோசித்து நீதி சாஸ்திரம் காமசாஸ்திரம் இரண்டின்படி அர்த்தம் காமம் இவைகளை ஸம்பாதித்து அனுபவிப்பதே புருஷார்த்தம்' பிரத்யக்ஷத்தைத் தவிர வேறுபிரமாணங்கள் கிடையாது. இந்த லோகத்தைத்தவிர பரலோகமென்பது கிடையாது சரீரமே ஆத்மா. பரலோகம் அதற்கு ஸாதனம்முதலியதைப் போதிக்கும் வேதம் புத்தி பலமில்லாதவர்களுக்குப் பிழைப்பிற்காகச் சில வஞ்சகர்களால் இயற்றப்பட்டது. முள்குத்துவது முதலியதால் ஏற்படும் துக்கமே நரகம். உயர்ந்தஸ்திரீ முதலிய வஸ்துக்களை அனுபவிப்பதே ஸ்வர்க்கம். ராஜாவே தைவம். மரிப்பதே மோக்ஷம். என்பதுமுதலிய விஷயங்களைப் போதிக்கும் ஸூத்திரங்களை இயற்றி சார்வாகன் என்னும் ஓர் அஸுரனைச் சிஷ்யனாகப்பண்ணிக்கொண்டு அவன்மூலம் எல்லா அஸுரர்களுக்கும் தமது சாஸ்திரத்தை உபதேசிக்கச்செய்து அவர்களுக்குக் கர்ம சிரத்தையைக் குறைத்து துர்பலர்களாகச்செய்து அவர்களைத் தேவர்கள் ஜயித்து ஸுகமாக இருக்கச்செய்தார். பிறகு சார்வாகன் என்னும் அஸுரன் தனது குருவாகிய பிருஹஸ்பதி பகவானால் தனக்கு உபதேசிக்கப்பட்ட மதத்தை உலகத்தில் அதிகமாகப் பிரசாரம் செய்தான். அதனால் அவன் பெயரால் அந்த மதத்திற்குச் சார்வாகமதமென பெயர் ஏற்பட்டது.

சார்வாகன் என்றால் சாரு - அழகான வாகன் - பேச்சை உடையவன் என்று பொருள். உலகத்தில் அதிருஷ்டத்தை விட திருஷ்டத்தில் நம்பிக்கை அதிகமானதால் திருஷ்டமான ஸுகத்திற்காகவும், திருஷ்டமான துக்க நிவர்த்திக்காகவும்தான் ஜனங்கள் பிரவிருத்திப்பது இயற்கை. ஸ்வர்க்காதிபாரலௌகிக ஸுகத்திற்காகப் புண்ய கர்மங்களைச் செய்பவர்களும், நரகாதி பாரலௌகிக துக்கங்களைவிலக்கப் பாபகர்மங்களைச் செய்யாமல் இருப்பவர்களும் அபூர்வம்.

ஆகையால் உலக இயற்கையை அனுஸரித்து ஒருவன் பேசினால் அவன்பேச்சு உலகத்திற்கு மிகவும் சாருவாய் - அழ

காயிருக்கும். ஆகையால் சார்வாகனுக்குப் பொருத்தமானபெயர் அமைந்தது.

அவன் மதம் சீக்ரம்சிரமமில்லாமல் உலகத்தில் பாவிவிட்டது. அதனாலேயே அவனது மதத்திற்கு லோகாயத மதமென்றும், மற்றொரு காரணப் பெயர் அமைந்தது. லோக - உலகத்தில் ஆயதம் - பரவினது என்று பொருள். தத்காலத்தில் ஸ்வய மர்யாதை என்னும்பெயரால் இதேமதம் உலகத்தில் எங்கும் பாவிக்கொண்டும் பாமர ஜனங்களுக்கு அழகாகத் தோன்றிக் கொண்டும் இருப்பதே இதற்கு அத்தாக்ஷி.

இந்தச்சார்வாகன் என்னும் அஸுரன் துர்யோதனனுக்கு ரொம்பவும் மித்ரம். இவன் தனது மித்ரமான துர்யோதனனை ஸம்ஹாரம்செய்து பாண்டவர்கள் ராஜ்யபரிபாலனம் செய்து கொண்டிருக்குங்கால் ஒரு ஸமயம் தபஸ்வியின் வேஷத்தைப் போட்டுக்கொண்டு தர்மபுத்திரன் ஸபைக்குவந்து பிராம்மணோத் தமர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது தனது நாஸ்திக மதத்தைக்கூறி உண்மையில் துர்யோதனந்தான் பாக்யசாலி ஏனென்றால் இந்த பூமண்டலத்தில் பலிஷ்டர்களான ஸமஸ்தமான ராஜாக்களும் இருக்கும்பொழுது தானே ஏக சக்ராதிபத்யம் செலுத்தி ஸ்வாராஜ்ய ஸுகத்தை அனுபவித்தானல்லவா? நீங் களோவென்றால் இப்பொழுது ஸமஸ்தமான வீரர்களும் போன பிறகு ஸ்திரீபாலவிருத்தப் பிராயமான இவ்வுலகில் ராஜ்யமாளு கிறீர்கள். உங்களது ராஜ்யஸுகம் என்னஸுகம். பார லௌகிக மானஸுகம் உண்டு என்றும் புண்யம் பாபம் உண்டுஎன்றும் ஏமாந்து யக்ஞாதி கர்மாக்களைச் செய்துகொண்டு கிலேசத்தைத் தான் அடைந்தீர்கள். ஸ்வல்ப ஸுகத்தைக்கூட அடையவில்லை. என்ன பிரயோஜனம் என்று நிந்தித்தான். உடனே அங்கு ஸபையில் உள்ள வைதிக பிராம்மணோத்தமர்களுடைய கோபாக் கினியால் தகிக்கப்பட்டு பஸ்மமானான். பிறகு அந்த சார்வாகன் என்னும் அஸுரன் வைதிகப் பிராம்மணர்களிடத்தில் உள்ள த்வேஷ பாவனையோடே இறந்தவன் கலியில் பிராம்மண குலத்தில் ஆனந்த தீர்த்தாசார்யாளாக அவதரித்தான். அப்படி அவரித்த பிறகும் பூர்வஜன்ம வாஸனையை அநுசரித்துத் தனது சார்வாகமதத்தை உலத்தில் பிரசாரப் படுத்தவேண்டுமே. இப்

பொழுது உலகம் முறையே ஸ்ரீமச்சங்கர ஸ்ரீகண்ட ராமானுஜாத்யவதாரங்களால் எங்கும் வேதப்ராமாண்யம் ஸ்தாபிக்கப்பட்டு வைதிகமாக விளங்குகின்றதே நமது மதத்தை ஸ்தாபித்தால் ஒருவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் போலிருக்கிறதே. இதற்கென்ன செய்யலாம் என்று ஆலோசித்து மனங்கலங்கி இருக்கட்டும் வேதத்திலேயே நமது மதத்தைப் புகுத்திப் பிரசாரம் செய்தால் ஸுலபமாய் நமது மதம் பரவிவிடும் என்று ஒருவாறு தைர்யங்கொண்டு நமதுமதத்திற்கு முன்போலவே இப்பவும் சார்வாக மதமென்று ஸ்பஷ்டமாய்ப் பெயர் வைத்துவிட்டால் சார்வாகமதம் வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளாத மதமென்பது பிரஸித்தமாதலால் நமது மதம் வேதப்பிராமாண்யத்தைக் கைக்கொண்ட இவ்வுலகத்தில் பரவாது. வேறுபெயரை வைத்துவிட்டால் இது சார்வாகமதமல்ல வைதிக மதந்தான். இதில் வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டிருக்கல்லவா! என்றெண்ணி ஸுலபமாகப் பெரும்பாலாரான ஜனங்கள் பிரவிருத்தித்துவிடுவார்கள். இரண்டொருவர்கள் அதிஸூக்ஷ்மபுத்தியால் உள்புகுந்துபார்த்து இது வைதிகமதமல்ல வைதிக வேஷம் போட்டுக்கொண்ட சார்வாக மதம். கோமுக வியாக்ரம்போல் அதாவது பசுவின்தோலைப் போத்திக்கொண்டு வெளிக்குப் பசுபோல் தோன்றும் புலிபோலுள்ளது என்கிற உண்மையைக் கண்டு பிடிப்பார்களானாலும் நமக்குப் பாதகமில்லை. பெரும்பாலார் சேர்ந்துவிடுவார்களல்லவா? அது நமக்குப்போதுமென்கிற அபிப்பிராயத்தால் தனது மதத்திற்கு த்வைதமதம் எனப்பெயர் இட்டு வெளியிட ஆரம்பித்தான்.

த்வைதமதம் பிரச்சன்ன சார்வாகமதம். அதாவது வெளிக்கு வேறுமதம்போல் தோன்றி அந்தரங்கத்தில் சார்வாக மதமாக உள்ளது என்பதற்குத் தகுந்த காரணங்கள் பின் வருமாறு.

(தொடரும்)

போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரிகள்.

---

நம் ஜகத்குருவின்

# மனமார்ந்த உபதேசம்.

त्रयी सांख्यं योगः पशुपतिमतं वैष्णवमिति
प्रभिन्ने प्रस्थाने परमिदमदः पथ्यमिति च ।
रुचीनां वैचित्र्यादृजुकुटिल नानापथजुषां
नृणामेको गम्यस्त्वमसि पयसामर्णव इव ॥

மேற்கண்ட சுலோகமானது புஷ்பதந்தர் என்று பெயர் பெற்ற ஓர் மஹாகவி இயற்றிய சிவமஹிம்ன ஸ்தோத்திரத்தில் காணப்படுகின்றது. இதற்கு வியாக்யானமாகத்தான் மது ஸூதன ஸரஸ்வதி என்கின்ற போசிரியர் பிரஸ்தானபேதம் என்கின்ற சாஸ்திர கிரந்தத்தைச் செய்திருக்கிறார். சுலோகத்தில் காணப்படுகின்ற प्रभिन्नेप्रस्थाने என்கின்ற வார்த்தைகள் இக் கிரந்தப்பேருக்குக் காரணமாக அமைந்தன என்பதற்கு ஐயமில்லை இந்த சுலோகத்தின் மஹிமையையும் அதின் வெகு அழகான உட்பொருளையும், இப்பொழுது எல்லா ஜனங்களுக்கும் அனுக் ரகம் செய்வதற்காக தென்னிந்தியாமுழுவதும் யாத்திரை செய்து வரும் நம் ஜகத்குரு காஞ்சீ, காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்காசாரியாரவர்கள் நம்மனதைக் கவரும்படியான ஓர் உபந்யாசத்தில் ஸ்ரீபெரும்பூதூர் என்னும் மகா க்ஷேத்திரத்தில் அங்கு வந்திருக்கும் சிஷ்யர்களுக்கு சுருக்கமான மணிமணியான வார்த்தைகளால் உரைத்தார்கள். அவ்வுபன்யாஸத்தின் சுருக் கத்தையும் அதைக் கேட்டுக்கொண்டிருந்த என் மனதில் தோன்றியவைகளையும், நான் இதில் வெளியிட ஆவலாயிருக் கிறேன். இதனால் மகா கவியானவர் நமக்கு அறிவிப்பது என்ன வென்றால் லோகத்தில் அனேகவிதமான மதங்கள் இருந்த போதிலும், அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய மதமே பெரியதென்றும், தங்கள் தங்கள் மதந்தான் நல்வழிக்கு காரணமாகுமென்றும் தங்களுள் சண்டை செய்தபோதிலும் எல்லா மதங்களாலும் அடையவேண்டிய வஸ்து ஒன்றுதான். அந்த வஸ்துவாக நீர் இருக்கிறீர் என்று பகவானை ஸ்தோத்திரம் செய்கிறார். அப்படிப் பலமதங்கள் நம்முடைய தேசத்தில் இருக்கின்றன என்பதற்கு திருஷ்டாந்தமாக சுலோகத்தில் சில பதங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். த்ரயி என்றும், சாங்க்ய தரிசனமென்றும், யோகமென்றும், சைவமதமென்றும், வைஷ்ண

மதமென்றும், லோகத்தில் பிரசித்தமான மதங்களிருக்கின்றன. இதில் த்ரயி என்றால் என்ன, சைவமதம் வைஷ்ணவமதத்தைச் சொல்லி விட்டபடியாலும் அத்வைதமதமே அதற்குப் பொருள் என்று தோன்றுகிறது. மீமாம்ஸாதர்சனத்தை குறிக்கலாமோ என்கிற ஸந்தேகம் சிலருக்கு உண்டாகலாம் ஆனால் அது இந்த இடத்தில் பொருந்தாது. இதற்கு மஹாபாரதத்தில் வியாஸ வாக்யத்திலும் கமகமிருக்கிறது.

सांख्यं योगः पाञ्चरात्रं वेदाः पाशुपतं तथा ।
किमेतान्येकनिष्ठानि पृथङ्निष्ठानि वा मुने ॥

शान्तिपर्व 359 अध्याय ॥

"ஸாங்கியமதம், யோகமதம், பாஞ்சராத்திரமதம் வேதங்கள்; பாசுபத(சைவ)மதம் இவைகள் ஒரே கருத்துக்கொண்டவைகளா? அல்லது வெவ்வேறுகருத்துக் கொண்டவைகளா?" என்று ஜநமேஜயர் வைசம்பாயனரைக் கேழ்க்க, அதற்கு அவர்—

सांख्यं योगः पाञ्चरात्रं वेदाः पाशुपतं तथा ।
ज्ञानान्येतानि राजर्षे विद्धि नानामतानि वै ॥

"ஓ! ராஜர்ஷியே!! ஸாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், வேதம், பாசுபத (சைவ) ம் இவைகள் அந்தந்த அதிகாரிகளுக்கு ஞான ஸாதனங்களாயினும் ஒரே கருத்துக்கொண்டவையல்ல. ஆனால் பற்பல கொள்கையுடையனவென்று அறிந்து கொள்ளும், என்று பதில் கூறியிருக்கின்றார். அதிகாரி பேதத்திற்காக வெவ்வேறு கொள்கையுடையனவாயினும் அவைகளால் அடையவேண்டிய தொன்றேயாகும்.

ஆனால் அப்படி வெவ்வேறு மதங்களால் முடிவில் அடைய வேண்டிய பொருள் ஒன்றாயிருந்தால் ஏன் வேறுபாடானமதங்கள் லோகத்தில் காணப்படவேண்டும் என்பதற்குக் காரணமும் இங்கு சொல்லப்பட்டிருக்கின்றது. மனிதர்கள் புத்தி பேதத்தினாலும் அவர்களின் ருசியினுடைய வித்யாசத்தினாலும் அவரவர்களுக்குத் தோன்றுகிற வழிகளில் செல்லுகிறார்கள். இவ்விதம் இருப்பதற்குப்பொருந்திய உவமையாக சுலோகத்தில் தண்ணீரின் செய்கையை ஒப்பிட்டிருக்கிறார். பூமியிலிருக்கிற எந்தவிதமான நீர் பாங்குகளும் எவ்வழியாகச் சென்றாலும் கடைசியாக பூமியை சுற்றி அளாவிநிற்கும் மகாசமுத்திரத்தில் போய் கலந்து விடுகின்றன. அதுபோல் எல்லா மனிதர்களும் எவ்விதமான மதங்

களில் சேர்ந்திருந்தபோதிலும் அடையவேண்டிய பொருளான ஈசுவரனிடத்தில் பக்தியுடன் மனதைச்செலுத்தி நடந்து வந்தார்களானல், ஒருவனுயிருக்கும் அந்த பரமாத்மாவையே அடைகின்றார்கள். இந்த சுலோகத்தில் சொல்லியிருக்கின்ற ஜலத்தின் உவமையினுல் ஓர் முக்ய தாத்பர்யமும் வெளிவருகின்றது. எப்படி சமுத்திரமானது பூமியைச்சுற்றி அளாவிக்கொண்டு நிறைந்திருப்பதால் பூமியிலிருக்கின்ற எல்லா ஜலங்களும் வேருேரிடம் போகமுடியாமல் அந்த சமுத்திரத்தையே அடையும்படியாக நேரிடுகின்றதோ அதேமாதிரி ஈசுவரன் எல்லா ஜீவர்களிலும் புகுந்து எங்கும் நிறைந்து ஜகத்முழுவதும் வியாபித்திருக்கின்ற படியால், எல்லா ஜீவர்களும் எந்தவழி போனுலும் எந்தமதம் அநுசரித்தாலும் கடைசியில் அந்த ஈசுவரனையே கலந்து பேரின்பத்தை அடையவேண்டுமே தவிர மற்றேரிடம் போவதற்குமுடியாது.

இந்த சுலோகத்தில் ऋजुकुटिल नानापथजुषां என்கின்ற விசேஷணமானது மனிதர்களுக்கும் ஜலங்களுக்கும் பொருந்தும் ஜலமானது பூமியில் அனேகவிதமான வழிகளால் செல்லுகிறது. அந்தமாதிரி செல்லுவது ஜலத்தின் ஒரு தன்மையாகும் அது போல் மனிதர்களும் தங்கள் ருசிபேதத்தால் அனேகவிதமான வழிகளில் செல்லுகிருர்கள். இதுவும் மனிதர்களின் ஒரு தன்மையாகும். ஜலமானது ஒரு மலையிலிருந்து உற்பத்தியாகி பாறைகளின் நடுவே சிறுவழியாகப்போய் பிறகு ஓர் அருவியாக வெகு சப்தத்துடன் மலைச்சரிவில் விழுந்து சமபூமியை அடைந்து ஓர் சாந்தநதியாகப்பெருகி, பிறகு அனேக கிளைகளாகப்பிரிந்து, பயிர்களுக்குப்பாய்ந்து மற்றும் அநேக உபயோகங்களுக்கு உள்பட்டு ஜலங்கள் குறைந்து ஓர் சிறு நதியாகப்போய் சப்தத்துடன் சமுத்திரத்தில் கலந்து சப்தமடங்கி தன் சொரூபம் அழிந்து சமுத்திர ஜலத்தோடு ஒன்ருகிறது. அதுபோல் ஜீவர்களும் இளம் பருவத்தில் வளர்ந்து யௌவனத்தில் அநேகவிதமான ஆசைகளினுலும் அகங்காரத்தினுலும் சப்தம்செய்துகொண்டுசம்ஸாரவாழ்க்கையில் புகுந்து அநேகவிதமாக அலைந்து புண்யபாபங்களால் அனேக கர்மாக்களைச்செய்து சுகதுக்கங்களையும் அனுபவித்து பிறகு ஒழிவடைந்து ஈசுவரனிடத்தில் மனதைக்கலந்து எல்லா விதமான அகங்காரங்கள் ஓய்ந்து பரமேசுவரஸ்வரூபத்தில், தான்

என்னும் தன்மை அழிந்து ஒன்றாகி விடுகிறார்கள் என்றுபதேசித்தார்கள். இந்தப்பிரகாரமாக அமிர்தவாக்கு வர்ஷத்தைக்கேட்கும் தருணத்தில் இதே அபிப்பிராயத்தை போதிக்கும்படியான மகாகவி காளிதாஸனுடைய சுலோகத்தை நான்ஞாபகப்படுத்திக் கொண்டேன்.

அந்த சுலோகமானது ராமாவதாரத்திற்காக தேவர்கள் எல்லோருங்கூடி பால்கடலில் சயனம்செய்துகொண்டிருக்கும் மஹாவிஷ்ணுவைக்குறித்துசெய்கிற ஸ்தோத்திரத்தில் காணப்படுகிறது.

बहुधाप्यागमैर्भिन्नाः पन्थानः सिद्धिहेतवः ।
त्वय्येव निपतन्त्योघा: जाह्नवीया इवार्णवे ॥

இதில் லோகத்தில் காணப்படும் அனேகவிதமான ஆஸ்திக மதங்களை ஆயிரமுகத்தோடு சமுத்திரத்தில் கலக்கும் கங்காப்பிரவாகத்திற்கு மகாகவியானவர் ஒப்பிட்டிருக்கிறார். ஆகையால் முன்னாளில் பெரியோர்களான சாஸ்திரத்தில் கறைகண்டவர்களும் மகாபக்த சிகாமணிகளும் மகாகவிகளுமான "புஷ்பதந்தர் காளிதாஸர் இவர்களுடைய உபதேசமும், அவர்கள் அபிப்பிராயத்தை மனதில் படும்படியாகபல திருஷ்டாந்தங்களுடன் வெகு அழகாக நமக்கு எடுத்துரைத்த நமது ஆசாரியாரவர்களுடைய உபதேசமும் என்னவென்றால்—"இத்தேசத்தில் வசிக்கும் எல்லா ஆஸ்திக மதங்களைச் சேர்ந்தவர்களும் அவரவர்கள் தங்கள் மதங்களைநம்பி மற்ற மதங்களை அனுவச்யமாக தூஷிக்காமலும் ஒருவருக்கொருவர் சண்டைசெய்துகொள்ளாமலும், ஸ்நேகபாவத்துடன் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து அவரவர்கள் மதத்தை சிரத்தையுடனும், ஒழுக்கத்துடனும், ஈசுவர பக்தியுடனும் அனுஸரித்துக்கொண்டுவந்து எல்லோரும்சிரேயஸ்ஸை அடையவேண்டும்" என்பதே.

கே. பாலசுப்பிரமணிய அய்யர்.

# சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

## தாய்சொல்கேளாத தநயர்கதி.

1. தக்ஷர் என்பவர் ஓர் ப்ருஹ்மா, அவருக்கு அனேகம் பெண்கள் உண்டு. அதில் கத்ரு விநதை என்ற இருவரையும் கச்யபருக்குக் கொடுத்தார், அவர் பெரியதபஸ்வி. இந்த இரண்டு பத்நிகளும் அவர் மனம் கோணாமல் பணிவிடை செய்தனர். அதைக்கண்டு கச்யபர் ஸந்தோஷமடைந்தார்.

பெண்களைப்பார்த்து வேண்டியவரத்தைக் கேளுங்கள் என்றார். கத்ரூ நல்ல பலமுள்ள ஆயிரம் புத்ரர் வேண்டுமென்றாள். விநதை இவர்களைவிட அதிக பலசாலிகளான இரண்டு பிள்ளைகள் வேண்டும் என்றாள்.

மஹரிஷி அனுக்ரஹம் செய்தார். உடனே இருவரும் கர்ப்ப மானார்கள். கத்ருவுக்கு ஆயிரம் முட்டைகள் உண்டாயிற்று. விநதைக்கோ இரண்டு முட்டைகள் உண்டானது. க்ரமமாக முட்டைகளைச் சூடுள்ள இடத்தில் வைத்தனர். வேண்டியபடி அவயங்காத்தனர். கத்ரு முட்டைகள் வெடித்தது. அதிலிருந்து ஆயிரம் பாம்புகள் உண்டாயின. விநதை ஐயோ எனக்கு இன்னும் குழந்தை பிறக்கவில்லையே என்று கஷ்டப்பட்டாள். அவளுக்கு மாத்திரம் குழந்தை பிறந்ததே என்று நினைத்தாள். இது பொறுமை இல்லையா? நமக்குப் பொறுமை உதவுமா?

அவஸரக்காரனுக்கு புத்தி மட்டு, விநதை ஒரு முட்டையை உடைத்துவிட்டாள். அதிலிருந்து இடுப்புக்குக் கீழ்பாகமில்லாத ஒரு குழந்தை பிறந்தது. அதுதான் அருணன் என்பது. தன் தாயைப்பார்த்து "அம்மா! என்ன வேலை செய்தாய்! இப்படிச் செய்யலாமா? இன்னும் கொஞ்சம் பொறுத்திருக்கக்கூடாதா? பழுப்பதற்குள் முட்டையை உடைத்தது பாவம் இல்லையா? அவரவர் செய்த பாவத்தை அவரவர்தானே அநுபவிக்கவேண்டும். இந்த பாவத்தால் 500-வருஷம் நீ அடிமையாக இருப்பாய், போ என்றது. அதோடு அந்த முட்டையையும் இதைப்போல் உடைத்துவிடாதே. முட்டை தானே வெடிக்கும். நல்ல பலமுள்ள குழந்தை பிறக்கும்" என்றான். தாயிடம் உத்திரவுபெற்று ஸூர்யனுக்கு அருணன் தேரோட்டியாக அமர்ந்தான்.

இன்னொரு முட்டையிலிருந்து கருடன் பிறந்தான். ஒருநாள் அக்காவும் தங்கையும் ஸமுத்திரக்கரைக்குப் போனார்கள். அங்கே ஓர் வெள்ளைக்குதிரை மேய்ந்துகொண்டிருந்தது. அதன் பெயர் உச்சைச்ரவஸ். அது பாற்கடலிலிருந்து உண்டானது. அதை இருவரும் பார்த்தனர். குதிரை இவர்களுக்கு எதிர்முகமாக நின்றது. ஆகையால் அதன் வால் இவர் கண்ணில் படவில்லை. அதன் வால் கறுப்பா வெளுப்பா என்று வம்பு பேசினர். விநதை வெளுப்பு என்றாள், கத்ரு கருப்பு என்றாள். என்ன பந்தயம்? நான் சொல்வதுதான் ஸரி என்றார்கள் இரண்டுபேரும்.

குதிரைவால் கறுப்பாயிருந்தால் கத்ருவுக்கு விநதை அடிமை, வெளுப்பாயிருந்தால் விநதைக்கு கத்ரு அடிமை என்று பந்தயங்

கட்டினார்கள். வால் வெளுப்பாயிருந்தாலென்ன கறுப்பாயிருந் தாலென்ன? வீண்வம்புணாலே அஹங்காரம் அதிகமானது. நான் சொல்வதுதான் ஸரி, இல்லை நான் சொல்வதுதான் ஸரி என்று வாதம் பலத்தது. நாளை காலையில் பார்ப்போம் என்று இருவரும் வீட்டிற்குச் சென்றனர். குத்தமுள்ள நெஞ்சு குறுகுறு என்றி ருக்கும். கத்ருவுக்குத் தூக்கம் வரவில்லை, ஏன்? வீண்வம்புக்காக வெள்ளைவாலைக் கறுப்பென்றாள். அதனால் சில கறும் நாகமான பிள்ளைகளைக் கூப்பிட்டாள். குதிரை வாலைக் கடித்து நில்லுங்கள். வால் கறுப்பென்று சொல்லி நான் ஜயிக்கிறேன் என்றான்.

வம்பினால் வளர்ந்த தீமைகளைப் பார். அஹங்காரம், பொய் வஞ்சனை இதெல்லாம் வம்பால் வந்ததல்லவா? அந்தகறுநாகங்கள் இதற்கு ஸம்மதிக்கவில்லை. ஆகையால் தாய்சொல்லை மறுத்து விட்டார்கள். அவள் செய்தது வஞ்சனைதான். அதன் பாபத்தை அவள் அடையப்போகிறாள். பிள்ளைகள் தாய்வார்த்தையைத் தட்டலாமா? தாயே தெய்வம் என்று வேதம் சொல்கிறது. தாயைவிட மேலான தெய்வமில்லை, காயத்ரியைவிட உயர்ந்த மந் திரமில்லை என்று ஸ்மிருதி சொல்கிறது. பிள்ளையை வளக்க தாய் என்ன பாடுபட்டிருப்பாள்? அவள் சொன்னதைக் கேட்காவிட் டால் அவளுக்குக் கோபம் வாராதா?

நெருப்பில் விழுந்து சாவீர்கள் என்று பிள்ளைகளைச் சபித் தாள். அதனால்தான் ஜநமேஜயன் ஸர்ப்பயாகத்தில் இவர்கள் விழுந்து மாண்டனர். சில பாம்பு சொன்னதைக் கேட்டது. அந்த குதிரை வாலைக் கறுப்பாகச் செய்தது. ஆகையால் விநதை தோற்றாள். கத்ருவுக்கு அடிமையானாள். அடிமைக்கு சுக முண்டோ? பல கஷ்டங்களை அநுபவித்தாள். பிறகு அவள் உத்தமபிள்ளையான கருடனால் சுகமடைந்தாள்.

தாய்சொல்லைக் கேளாததற்கே இந்த கதி வந்தது. ஆனால் தாயை நிந்திப்போருக்கு என்ன கதி கிடைக்கும்? மற்றவர் பேச் சைக்கேட்டு பெற்ற தாயை அவமானம் செய்தால் அவர் நல்ல கதி அடைவரா? தாய் நமக்குப் பாலூட்டினாள். அன்னமளித்து வளர்த்தாள். அந்த தாய்க்கு நாம் சோறு போடாமல் கஷ்டப் படுத்தினால் என்னகதி அடைவோம்? தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை. தாய்வயிர் குளிர்ந்தால் நம்குலம் வளரும். பேயா னாலும் தாய். அவள்மனம்நோக ஆயிரம் புண்யம் செய்தாலும் அது பலிக்காது. ஆதலால் தாயை தெய்வமாக எண்ணிப் பூஜிப்போம்.

# வாரவிருத்தாந்தம்.

உத்தமி நவகாளி என்ற இடத்தில் ஸேவகனாக இருந்த ஒருவன் இறந்தான். அவனது வியோகத்தைத் தாளாது அவன் மனைவி அரை மணிக்கெல்லாம் உயிரை விட்டுவிட்டாளாம். ஒரே சிதையில் இருவரையும் தகனம்செய்தனர். புராணவாயிலாக உத்தம ஸ்திரீகளின் ஸ்திதியைக் கேட்டிருக்கிறோம். உயிருடன் சிதையில் தீக்குளித்த ஸ்திரீகளைப்பார்த்தும் கேட்டுமிருக்கிறோம். தானாகவே விரஹதுக்கத்தால் உயிர் நீத்த உத்தமியின் கற்பை என்னென்போம். இவர்களால்தான் இந்தியாவிற்கும் தர்மத்திற்கும் பெருமை. உத்தமிகள் மரணமும் மங்களமே.

அய்யர்வாழ்க:—ஸ்ரீமான் ஐயுவய்யரின் பெருங்கொடையை முன் குறிப்பிட்டோம். அவரளித்த த்ரவ்யத்தைக்கொண்டு அவரெதிரிலேயே அத்வைத பாடசாலை 20உ காலை கும்பகோணம் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீமடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பல ஆஸ்திக சிகாமணிகள் அருமையான உபன்யாஸம் செய்தார்கள். இது போன்ற தார்மிகர் பேருதவிபுரிந்தால் அத்வைத ஸபையின் ஜீவகலையைப் ப்ரசாரமாக எவரும் எங்கும் காணலாம். ஸ்ரீஜகத்குருவரது ஆசீர்வாதமும் இவருக்குக் கிடைத்தது பொன்னால் செய்த புஷ்பத்திற்கு வாஸனையும் அமைந்ததுபோலாகும். தர்மகர்த்தாக்களுக்கு உத்ஸாக சக்தியை ஊட்டும் எமது பரமாசார்யரின் பொன்னடிபோற்றி வாழ்க! தார்மிக ஐய்யுவாழ்க!

தீண்டாமையும் ஆலயமும்:—20உ சென்னை தம்புசெட்டி வீதி ஸ்ரீசங்கரமடத்தில் ஸ்ரீமடம் புராணப்ரவசந ஸபையின் ஆதரவில் ஸ்ரீமான் எம். கே. ஆசார்யர் அக்ராஸனம் வஹிக்க, மஹாமஹோபாத்யாய கோளரத்னம் ஸ்ரீ அனந்தகிருஷ்ணசாஸ்திரிகள் ஷை விஷயமாக ஓர் அரிய உபன்யாஸம் செய்தார். இவர் வடதேசத்திலிருப்பதால் ஆர்யஸமாஜத்தைத் தாக்கிப் பேசுவார் என்ற எண்ணத்தால் ஆர்யஸமாஜத்தார் பலர்வந்திருந்தனர். எவர் மநமும் நோகாதபடி வெகு அழகாக உபன்யாஸகர் பேசியதில் எவரும் வாயைத் திறக்கவகையின்றி சென்றனர். ஆலயத்தின் பொருளையும் பெருமையையும் நன்கு விளக்கினர். இங்கு ஸ்ரீமடத்தில் ஸ்ரீகுருகிருபையால் பற்பல அரியபெரிய உபன்யாஸங்கள் நடக்கின்றன.

ம. ம. ராஜு சாஸ்திரிகள் பாடசாலை:—20உ காலை கும்பகோணத்தில் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீமடத்தில் ஷை பாடசாலைப் புதுயிரைப்பெற்றது. ஆஸேது ஹிமாசலம் மஹாமஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகள் பெயரைக்கேளாதவர் இரார். இவரது சிஷ்யர்கள் மூலம் அவாள் பெருமையை இன்னும் கண்கூடக்காண்கிறோம். அன்னார்பெயரால் ஆரம்பித்த பாடசாலை காலக்கேட்டால்

தௌர்பல்யத்தை அடைந்துமறுபடியும் பகவத்கிருபையால் அன்னார்போரான சாஸ்த்ரரத்நாகரம் பிரும்மஸ்ரீயக்ஞஸாமிசாஸ்திரிகளவாளது நன்முயற்சியால் அத்வைத ஸபை மூலமாக புத்துயிர் பெற்றது போற்றற்கேற்றதே. என்னும் மார்க்கண்டேயனாக இது வாழ்க.

வாமதேவரா? 21உ. கும்பகோணம் டவுன் ஸ்கூலில் தஞ்சை ஜில்லா ப்ராஹ்மண ஸபையின் இரண்டாம் ஆண்டுவிழா நடந்தது. இக்குழந்தைதோன்றி இரண்டே ஆண்டுகள் ஆயினும் இருநூறு ஆண்டுகள் ஆனவன் செய்ததைவிட அதிகமான வேலைகளைச் செய்திருக்கிறது. இதன் செய்கைகளைக் கண்டவருக்கு கர்ப்பத்திலேயே ஞானத்தைப்பெற்ற வாமதேவரது நினைவு வாரமலிருக்காது. இச்சபைக்கு பல்லாண்டு கூறுவாம்.

இளையவரா மூத்தவரா? தஞ்சை ப்ராமணர் ஸநாதனதர்ம ரக்ஷணை ஸபை ஒன்றுளது. எவ்வகையிலும் இது கும்பகோண ஸபைக்குக் குறைந்ததாக இல்லை. அதற்கும் இம்மாதத்திலேயே இரண்டாமாண்டு பூர்த்தியானது. இது தர்மப்ரசாரத்துடன் ஓர் அழகிய ஸம்ஸ்கிருத கலாசாலையையும் நடத்துகிறது. இதன் வருஷ அறிக்கை கணக்குப்பரிசோதகரது நற்சாக்ஷிப்பத்திரத்துடன் நமக்கு அன்புடன் அனுப்பிக்கப்பட்டது. ஆஸ்திக தர்மத்தைப்பற்றி அங்கு வரைந்திருக்கும் வாக்யங்கள் மதாபிமானிகளது மனதை உருக்கும். ஜில்லாவுக்கு ஓர்ஸபை இதைப்போல் தோன்றினாலும் போதும், கார்யதர்சியின் ஊக்கத்திற்கும் அன்பிற்கும் வந்தனமளிப்பதோடு இச்சபையும் இவரும் சிரஞ்ஜீவியாயிருந்து லோகோபகாரம் செய்யும்படி அருள்புரிய .பகவானை வேண்கிறோம்.

இரங்குகிறோம்:—ஒருவர் அத்வைதத்தை நிந்தித்துப் பல ஆபாஸமான நோட்டீசுகளைப்போட்டு மார்தட்டி சவால் கூறிச் சண்டைக்கழைக்கிறார். சிதம்பரத்தில் நடந்த பசுபந்தத்தைப் பார்த்து நம்பெரியோரது மூடத்தனமிது என ஓர் வக்கீல் வருந்தினார். இவர்களது செயல் பலமதாபிமானிகளுக்கு ஆத்திரத்தை ஊட்டுகிறது, சாந்தமாகப் பொருத்திருப்போரைப் பேடியென்றும் மதாபிமானமற்றவனென்றும் இவர் மதாபிமானத்தால் கூறுகின்றனர். இவர்களது மதாபிமானத்தைக்கண்டு மகிழ்கிறோம். முன்கூறியவர்களது பாபச்செயலுக்குப்பரிதபிக்கிறோம், இனியாவது ஸர்வேச்வரன்மதத்வேஷமின்றி தர்மத்தில்புத்தியைச்செலுத்தும்படி இவர்களுக்கு ஆசீர்வதிப்பாரா? என ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீவத்ஸ, ஸோமதேவசர்மா.